தமிழ்நாடு அரசு

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

# அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2008–09 மற்றும் 2009–10 ஆம் ஆண்டுகளுக்கான கிராம ஊராட்சிகளில் நிறுவப்படவுள்ள நூலகங்களுக்கு பெரியார் எழுதிய மற்றும் பெரியார் பற்றிய, இராஜாஜி எழுதிய மற்றும் இராஜாஜி பற்றிய தமிழ் மற்றும் / அல்லது ஆங்கில நூல்கள் வழங்குவதற்கான விருப்பத்தை தெரிவித்தல்.

1. 2008–09 மற்றும் 2009–10ஆம் ஆண்டுகளில் அமைக்கப்படவுள்ள அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களுக்கான புத்தகங்கள் வழங்குவதற்கான விருப்பம் தெரிவித்தல் குறித்து கடந்த 5.1.2009 அன்று தினகரன் நாளிதழின் 9ஆம் பக்கத்திலும், டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழின் 13ஆம் பக்கத்திலும் வெளிவந்துள்ள விளம்பரத்தினையும் பார்க்கவும்.
2. வெளியீட்டாளர்கள்/விற்பனையாளர்களிடமிருந்து தமிழ் மற்றும் / அல்லது ஆங்கிலப் புத்தகங்களின் பட்டியல் பின்வரும் வகைப்பாடுகளில் மட்டும் இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்தில் வரவேற்கப்படுகின்றன.
   i) பெரியார் எழுதிய புத்தகங்கள் ii) பெரியாரின் வாழ்க்கை மற்றும் கருத்துகள் குறித்து இதர எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்கள்
   iii) இராஜாஜி எழுதிய புத்தகங்கள் iv) இராஜாஜியின் வாழ்க்கை மற்றும் கருத்துகள் குறித்து இதர எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்கள்
3. தேர்வு செய்யப்படும் நூலினைப் பொறுத்து ஒரு எண்ணிக்கை / பல எண்ணிக்கையிலான பிரதிகள் தேவைப்படும்.
4. தேர்வு செய்யப்படும் ஒவ்வொரு நூலிலும் **குறைந்தது 5,062 பிரதிகள்** கொள்முதல் செய்யப்படும்.
5. தேர்வு செய்யப்படும் நூல்கள் மாநிலத்திலுள்ள 385 வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கும், மாவட்டத்தில் உள்ள ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம் மற்றும் சென்னையில் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்ககத்திற்கும் வெளியீட்டாளரால் / விற்பனையாளரால் அவரது சொந்த செலவில் கொண்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. ஒவ்வொரு நூலுக்கான பட்டியலிடப்பட்ட விலையை குறிப்பிடுவதுடன் (i) 5,100 பிரதிகள் வரை, (ii) 5,100க்கு மேல் பிரதிகளுக்கு வழங்க இயலும் அதிகபட்சத் தள்ளுபடி விலையையும் குறிப்பிட வேண்டும். மாநிலத்தில் உள்ள அலுவலகங்களுக்கு நூல்களை அங்கு கொண்டு சேர்ப்பித்திட இடம் எதுவாக இருப்பினும், ஒரு பிரதிக்கான **அதிகபட்ச விலை** மற்றும் **அதிகபட்சத் தள்ளுபடி விலையையும்** ஒவ்வொரு நூலுக்கும் பைண்டிங்கிற்கு தகுந்தவாறு குறிப்பிடவேண்டும்.
7. நூலுக்கு குறிப்பிடும் விலை ஏற்று மற்றும் இறக்கு கூலி, கொண்டு செல்லுதல், சுங்க வரி, காப்பீடு, வரி, தீர்வை, கட்டணம், வரி மேல் வரி மற்றும் இதர வரி விதிப்புகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இறுதி ஒப்பந்த விலையானது நூல்கள் அனைத்து மையங்களுக்கும் விநியோகம் முடிவுறும் வரை உயர்த்தப்படாமல் இருத்தல் வேண்டும்.
8. மேலே வ.எண் 2ல் கூறப்பட்டுள்ள இனங்களுக்கு மட்டும் ஒவ்வொரு வெளியீட்டாளரும்/விற்பனையாளரும் **25 நூல்களுக்கு மிகாமல்** முன்மொழியலாம்.
9. விண்ணப்பத்துடன் பிணை வைப்புத் தொகை ரூ.5,000/–ஐ “Commissioner of Rural Development and Panchayat Raj” பெயரில் Payable at Chennai கேட்பு காசோலையாக இணைக்கப்படவேண்டும். 5.1.2009 அன்று வெளியான விளம்பரத்தின் அடிப்படையில் வெளியீட்டாளர்கள்/விற்பனையாளர்கள் எவரேனும் **பிணை வைப்புத் தொகை (EMD)** அளித்திருந்தால் **அவர்கள் தற்போது பிணை வைப்புத் தொகை** அளிக்கத் தேவையில்லை. இருப்பினும் 5.1.2009 அன்று டைம்ஸ் ஆப் இந்தியா / தினகரன் நாளிதழ்களில் வெளியிடப்பட்ட விளம்பரங்களின் அடிப்படையில் ரூ.5,000/– பிணை வைப்புத் தொகை அளிக்கப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட வெளியீட்டாளர்கள்/விற்பனையாளர்கள் அவ்விவரங்களை சான்றளிக்க வேண்டும். இவ்விவரங்கள் ஊரக வளர்ச்சி இயக்ககத்தினால் ஆய்வு செய்யப்பட்ட பின்னரே ஒப்புக்கொள்ளப்படும். ஏற்கெனவே அல்லது தற்போதும் பிணை வைப்புத் தொகை அளிக்காமல் பெறப்படும் வெளியீட்டாளர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
10. **விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள புத்தகப் பட்டியலின்படி அதன் மாதிரி புத்தகம் இணைக்கப்படவேண்டும்.** ஒரே புத்தகத்திற்கு பல்வேறு பைண்டிங்கிற்கான விலை விபரம் குறிப்பிட்டிருந்தால், குறிப்பிடப்பட்ட பைண்டிங்படி மாதிரி புத்தகங்கள் கொடுக்கப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் கொடுக்கப்படாத மாதிரி புத்தகங்கள் தேர்வு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
11. எக்காரணமும் குறிப்பிடாமல் எந்த ஒரு நூலையும் தேர்வு செய்யவோ, நிராகரிக்கவோ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரமுண்டு..
12. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளுக்கான கிராம ஊராட்சி நூலகங்களுக்கு நூல்கள் வழங்குவதற்கான ஆணை பெற்று வழங்கவேண்டிய நூல்கள் முழுமையாகவோ அல்லது உரிய காலத்திலோ வழங்க தவறியிருப்பின் அந்த வெளியீட்டாளர்கள் / விற்பனையாளர்களின் நூல்களை நிராகரிக்கும் உரிமை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு உண்டு.
13. விண்ணப்பத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரம் மற்றும் விபரக்குறிப்பீட்டின்படி இல்லாத புத்தகங்களை நிராகரிக்கும் உரிமை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு உண்டு..
14. தேர்வு செய்யப்பட்டுள்ள வெளியீட்டாளர்கள் / விற்பனையாளர்கள் கொள்முதல் ஆணை பெறுவதற்கு முன்னர் புத்தக விலை மதிப்பீட்டின்படி 2% **காப்புத் தொகை** (Security Deposit) அளிப்பதுடன் “நிலையான உறுதிமொழி” மற்றும் ஒப்பம் இடப்பட்ட “உடன்படிக்கை” ஆகியவற்றை உரிய படிவத்தில் அளித்தல் வேண்டும். “நிலையான உறுதிமொழி” மற்றும் ஒப்பம் இடப்பட்ட “உடன்படிக்கை” ஆகியவற்றிற்கான மாதிரி படிவங்கள் (எவ்வித அறிவிப்பும் இன்றி மாறுதலுக்கு உட்பட்டது) **www.tnrd.gov.in** என்ற இணையதள முகவரியில் தெரிந்துகொள்ளலாம்.
15. நூல்கள் வாங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து **4 மாதங்களுக்குள்** நூல்கள் வழங்கப்பட வேண்டும்.
16. புத்தகங்கள் மையங்களுக்கு அனுப்பும்போது சிதைவு/சேதம்/கிழிந்து போனாலோ அவற்றை வெளியீட்டாளர்கள் / விற்பனையாளர்கள் தங்களது சொந்த செலவில் மாற்றி புதிய புத்தகங்களை வழங்க வேண்டும்.
17. மாநிலத்தில் உள்ள அனைத்து மையங்களுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள 4 மாத கால அவசாகத்திற்குள் தரம் மற்றும் விவரக் குறியீட்டினை உறுதி செய்து அனைத்து புத்தகங்களையும் முழுமையாக விநியோகம் செய்த வெளியீட்டாளர்கள்/விற்பனையாளர்கள் ஆகியோர் மட்டுமே முழுத் தொகை பெற தகுதியுடையவராவர். தொகை வழங்குவதற்கான விதிமுறைகள், அபராதத் தொகைக்கான விதிமுறைகள் மற்றும் கொள்முதல் ஆணை நிராகரிப்பு செய்யப்படுவதற்கான வரையறைகள் ஆகியவை தேர்வு செய்யப்படும் வெளியீட்டாளர்கள்/விற்பனையாளர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருடன் செய்துகொள்ளும் ‘‘உடன்படிக்கை’’ படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.
18. தேவை ஏற்படின் இந்த அறிவிப்பில் உள்ள நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டவைகளையோ மாற்றம் செய்திட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரமுண்டு.

**குறிப்பிட்டப் படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், பிணை வைப்புத் தொகை (**EMD**), புத்தகங்களின் பட்டியல் மாதிரி புத்தகங்கள் ஆகியன கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு 30.11.2009 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் கிடைக்கப்பெற வேண்டும்.**

**ஊரக வச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்,**
**பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை 600 015.**

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2008–09 மற்றும் 2009–10 ஆம் ஆண்டுகளுக்கான கிராம ஊராட்சிகளில் நிறுவப்படவுள்ள நூலகங்களுக்கு பெரியார் எழுதிய மற்றும் பெரியார் பற்றிய, இராஜாஜி எழுதிய மற்றும் இராஜாஜி பற்றிய தமிழ் மற்றும் / அல்லது ஆங்கில நூல்கள் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவம்.

1. வெளியீட்டாளர்கள்/விற்பனையாளர்கள் பெயர் மற்றும் முகவரி :
2. வர்த்தகம் நிறுவப்பட்ட ஆண்டு :
3. தொலைபேசி/நிகரி/மின்னஞ்சல் முகவரி :
4. வெளியீட்டாளரா? விற்பனையாளரா? :
5. தொடர்புகொள்ள அங்கீகரிக்கப்பட்ட நபரின் பெயர் :
6. வர்த்தகத்தின் தன்மை { (தனி உரிமையாளர்/ பங்குதாரர்/ நிறுவனம்/ சங்கம்/ அறக்கட்டளை/ கல்வி நிறுவனம்/ இதர வகை (குறிப்பிடவும்) }
7. இந்த ஒப்பந்தத்திரல உங்களுடைய தோழமை நிறுவனங்கள் பங்கு பெற்றுள்ளதா? ஆம்/இல்லை. (ஆம் எனில் தோழமை நிறுவனங்களின் பெயர், முகவரி மற்றும் நிறுவப்பட்ட ஆண்டு)

**(குறிப்பு: ஒரு தோழமை நிறுவனம் என்பது ஒப்பந்ததாரர் ஒரு நிறுவனத்தில் நேர்முகமாகவோ அல்லது வாழ்க்கைத் துணை,உடன்பிறப்புகள்,பெற்றோர் மூலம் மறைமுகமாகவோ அக்கறை கொண்டவர்)**

8. கடந்த மூன்று வருடங்களுக்கு நிதி செயலாக்கம்.

| வருடம் | மொத்தம் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்கள் | புத்தக விற்பனையின் நிதியளவு (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|
| 2006–07 | | |
| 2007–08 | | |
| 2008–09 | | |

9. தாங்கள் வருமான வரி விதிப்பிற்குரியவரா? ஆம்/இல்லை
   (ஆம் எனில் PAN விவரம் தெரிவிக்கவும்)
10. புத்தக தலைப்புகளின் விவரம்.

| வ. எண். | நூலின் தலைப்பு | மொழி | ஆசிரியர்/ ஆசிரியர்கள் | முதல் பதிப்பின் ஆண்டு | பதிப்புகளின் எண்ணிக்கை | இதுவரை விற்பனை செய்யப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை (அனைத்து பதிப்புகளுக்கும்) | நூலில் உள்ள பக்கங்களின் எணணிக்கை | * புத்தகத்தின் அளவு | ** காகிதத்தின் தரம் | பைண்டிங் வகை | | | பட்டியலிடப்பட்ட விலை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | திடமான பைண்டிங் (Hard Bound) | | பேப்பர் பேக் பைண்டிங் (Paper Back Binding) | திடமான பைண்டிங் (Hard Bound) | | பேப்பர் பேக் பைண்டிங் (Paper Back Binding) |
| | | | | | | | | | | கேஸ் பைண்டிங் (Case Binding) | காலிகோ பைண்டிங் (Calico Binding) | | கேஸ் பைண்டிங் (Case Binding) | காலிகோ பைண்டிங் (Calico Binding) | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| | | | | | | | | | | | | | | | |

* டெமி 1/4, டெமி 1/8, கிரவுன் 1/8 அல்லது வேறு அளவு (சென்டிமீட்டரில் குறிப்பிடவும்)

** ஜி.எஸ்.எம். மற்றும் தரத்தினைக் குறிப்பிடவும். உதாரணம்: 60/70 ஜி.எஸ்.எம். ஒயிட் க்ரீம் வோவ்/மேப் லித்தோ முதலியன.

**11. தள்ளுபடி விவரம்.**

5,100 பிரதிகள் வரை

| கேஸ் பைண்டிங் (Case Binding) | | காலிகோ பைண்டிங் (Calico Binding) | | பேப்பர் பேக் பைண்டிங் (Paper Back Binding) | |
|---|---|---|---|---|---|
| தள்ளுபடி சதவீதம் | தள்ளுபடி செய்த பின்னர் விலை | தள்ளுபடி சதவீதம் | தள்ளுபடி செய்த பின்னர் விலை | தள்ளுபடி சதவீதம் | தள்ளுபடி செய்த பின்னர் விலை |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| | | | | | |

5,100 பிரதிகளுக்கு மேல்

| கேஸ் பைண்டிங் (Case Binding) | | காலிகோ பைண்டிங் (Calico Binding) | | பேப்பர் பேக் பைண்டிங் (Paper Back Binding) | |
|---|---|---|---|---|---|
| தள்ளுபடி சதவீதம் | தள்ளுபடி செய்த பின்னர் விலை | தள்ளுபடி சதவீதம் | தள்ளுபடி செய்த பின்னர் விலை | தள்ளுபடி சதவீதம் | தள்ளுபடி செய்த பின்னர் விலை |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| | | | | | |

**12. சான்றிதழ்/உறுதி அளிப்பு.**

1. நூலுக்கு குறிப்பிடும் விலை ஏற்று மற்றும் இறக்கு கூலி, கொண்டு செல்லுதல், சுங்க வரி, காப்பீடு, வரி, தீர்வை, கட்டணம், வரி மேல் வரி மற்றும் இதர வரிவிதிப்புகள் ஆகியவை மாநிலத்தில் உள்ள அனைத்து மையங்களுக்கும் (அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கும், மாவட்டத்தில் உள்ள ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்ககம்) விநியோகம் செய்யப்படுவதற்கு புத்தகத்தின் நிலை மாநிலம் முழுமைக்கும் ஒரே மாதிரியாக இருக்கும் என சான்று அளிக்கிறேன்.
2. இறுதி ஒப்பந்த விலையானது நூல்கள் அனைத்து மையங்களுக்கும் விநியோகம் முடிவுறும் வரை உயர்த்தப்படாமல் இருத்தல் வேண்டும் என்பதை அறிவேன்.
3. மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து விபரங்களும் சரியானவை என்று சான்று அளிக்கிறேன். அளிக்கப்பட்டுள்ள விவரங்களில் ஏதேனும் தவறு என்று கண்டறியப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை நான் அறிவேன்.
4. நான் விண்ணப்பத்துடன் (1) ரூ.5,000/–க்கான பிணை வைப்புத் தொகை (EMD) (அல்லது 5.1.2009 அன்று டைம்ஸ் ஆப் இந்தியா மற்றும் தினகரன் நாளிதழ்களில் வெளியிடப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் ரூ.5,000/– பிணை வைப்புத் தொகை அளிக்கப்பட்டிருப்பின் அதற்கான சான்றிதழ்) (2) படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்களின் மாதிரி புத்தகங்கள் ஆகியவற்றையும் இணைத்துள்ளேன்.

**(வெளியீட்டாளர்/ விற்பனையாளரின் கையொப்பம்)**